# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2452/23 - 2025 සැප්තැම්බර් මස 03 වැනි සඳුදා - 2025.09.03

*2452/23 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ 6/ 2017

**2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரச சபைச் சட்டம்**

**9 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் நிரோஷன் ரத்நாயக்க ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019, செத்தெம்பர் 26 ஆந் திகதிய 2142/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளையின் மூலம் திருத்துகின்றேன்.

(அ) "யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம்" எனும் சொற்களுக்கு பதிலாக, "தற்போது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பலாலி விமான நிலையம்" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதற்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும் :

**அட்டவணை**

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள, தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் வலிகாமம் வடக்கின், மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு மற்றும் பலாலி என்னும் கிராம அலுவலர் பிரிவுகளினுள் அமைந்துள்ள

நில அளவை வரைபடம் PPA1579 இல. துண்டு 1 தொடக்கம் 456 எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள "தற்போது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பலாலி விமான நிலையம்" என அழைக்கப்படும் காணியின் முழுமையாக பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதும் மற்றும் 349 ஏக்கர், 03 றூட், 35.9 பேர்ச் விஸ்தீரணத்தை கொண்டுள்ளதும் ஓடுபாதை மற்றும் ஓடுபாதை துண்டு மற்றும் ஓடு பாதையை ஒட்டி வடக்கு நோக்கி அமைந்துள்ள விமான நிலையத்தின் முழுமையான பகுதியும்.".

பிமல் நிரோஷன் ரத்நாயக்க,
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான
சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2025,செத்தெம்பர் 01.

EOG 09- 0032